# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,924—1964 ජනවාරි 17 වැනි සිකුරාදා—1964.1.17**

13,924 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு சனவரி மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 13 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 15 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தைத அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு ஐயைய நடத்தல் வேண்டும்.

## முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 31 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு தை (சனவரி) மாதம் 25 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்ஞட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு தை (சனவரி) மீ 17 ந் உ.*

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப் பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர் ; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித் திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உப பந்திகள் 2 (II) (B), 2 (II) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமானமுறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப்பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவராயும், வேண்டிய தகைமைகளைச் கொண்டவர்களாயுமுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவர்கள்மூலம் அனுப்பவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்குவிதிக்கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடமுடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில், தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

எஸ்.எச். 332/60

## பொலிஸ் திணைக்களம்

### இயந்திரத் தொழில்வல்ல பொலிஸ் கொஸ்தாப்புமாரைச் சேர்த்தல்

இலங்கைப் பொலிஸ் சேவையில் இயந்திரத் தொழில்வல்ல கொஸ்தாப்புமார் பதவிகட்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் கட்டுக்குருந்தையில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கலாசாலை அதிபருக்கு விலாசமிட்டு அவருக்கு 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ம் திகதியோ அதற்கு முன்பாகவோ கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

3. **வேதனம்.**—(அ) சேர்ந்தவுடன் வருடமொன்றிற்கு ரூபா 750 ஒரு வருட சேவையின் பின் ரூபா 840 பின் வருடா வருடம் ரூபா 42 வீதம் 22 வருடாந்த உயர்வுகளுடன் ரூபா 1,764 வரை உயரும். ரூபா 1,050, ரூபா 1,260, ரூபா 1,470, ரூபா 1,638 வருடாந்த வேதனத்தை அடையுமுன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

(ஆ) அவர்கட்கு (அ) இலவச குடிமனை (ஆ) இலவச கோலஉடைகள் (இ) பொட்டனிப் பெட்டி, போர்வை, சப்பாத்துக்கள், சுத்தம் செய்யும் உபகரணங்கள் ஆகியவைகளும் கொடுக்கப்படும்.

4. **வயது எல்லை.**—1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ம் திகதியில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **வேண்டப்படும் தகைமை.**—(அ) கல்வி : சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு மொழி எழுதவாசிக்க வல்லவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) தொழில் : விண்ணப்பகாரர்கள் ஓர் மதிப்புக்குரிய மோட்டார் எஞ்சினியரிங் தாபனத்திலோ அல்லது வேறு அரசாங்கப் பகுதியிலோ 4 வருடத்திற்குக் குறையாது தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(இ) தேவைப்படும் கண்பார்வை : ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்குக் குறையாதிருக்க வேண்டும். ஒரு கண்ணில் பார்வை 6/6 ஆக இருந்து மற்றக் கண்ணில் பார்வை 6/18 ஆக இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஈ) தேகநிலை : வைத்திய பரிசோதனையில் தகுதியுடையவராகக் காணப்படல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரிகள் விவாகமானவர்களாக இருத்தல் கூடாது. மாஜி இராணுவத்தினருக்கும் இலங்கையிலுள்ள பிரித்தானிய கடல் படைத்தளங்களில் உத்தியோகம் வகித்தவர்களுக்கும் இக்கட்டுப்பாடு இல்லை.

6. **வேலைக்குரிய நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப் பாற்றிச் சம்பளம் உள்ளதுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப் பாற்றிச் சம்பள நிதிக்கும், வேறு பொலிஸ் அனுதாப நிதி முதலிய பொலிஸ் திணைக்கள நிதிகட்கும் கட்டுப்பணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்.**—(அ) ஒவ்வொரு உத்தியோகத்தரும் 3 வருடகால தகுதிகாண் நிலைக்கூடாகச் செல்ல வேண்டியதாக இருக்கும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் அரசாங்க சேவை அதிகாரசபை விதிகட்கும், நிதிப் பிரமாணங்கட்கும், நடைமுறைக் கைநூலில் உள்ள பிரமாணங்கட்கும், திணைக்களக் கட்டளைகட்கும், வேறு பொலிஸ் பிரதம அதிபதியினாலோ அல்லது அரசாங்கத்தாலோ காலத்துக்குக் காலம் கொடுக்கப்படும் எந்தக் கட்டளைகட்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

(இ) தெரிவு செய்யப்பட்டோர் அரசாங்க பாஷை விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

(ஈ) அவர்கள் உத்தியோகத்தில் நிரந்தரமாகும் வரை விவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் இரண்டு வருட காலத்திற்கு மேற்பட நன்றாக வேலை செய்தபின்னர் பொலிஸ் பிரதம அதிகாரியினுடைய சம்மதத்தின் பேரில் விவாகம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

8. விண்ணப்பக்காரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சான்றிதழின் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டும்.

(அ) பிறப்பு சான்றிதழ்,

(ஆ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்,

(இ) 4 வருட தொழிற்பயிற்சிக்குரிய சான்றிதழ்.

9. அரசாங்கத்தின் கீழ் முன்னமே நிரந்தரமான பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தராயின் தங்கள் தங்கள் திணைக்களத் தலைவர்கட்கூடாகத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

10. இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) 1 ம் பாகம் 2 ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் அரசாங்க சேவை பதவிகள் நியமனங்கட்குரிய நிபந்தனைகளைப் பார்க்கவும்.

எஸ். எ. திஸ்ஸநாயகா,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 6 ந் உ.

**விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பக்காரரின் முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) : ————.

2. விலாசம் (பெரிய எழுத்துக்களில்) :————.

3. பிறந்த திகதியும், 10.2.64 இல் வயதும் :————.
   1. தேசிய இனம் :————.
   இலங்கையராக வம்சாவழி வந்தவரா, அல்லது பதிவு மூலமாக : ————.
   2. வம்சாவழி வந்த இலங்கையராயிருந்தால், கீழ்க்காணுவோரின் பிறந்த இடங்களைக் கூறுக :
      அ. விண்ணப்பக்காரர் :————.
      ஆ. விண்ணப்பக்காரரின் தகப்பன் :————.
      இ. விண்ணப்பக்காரரின் தகப்பன்வழிப் பாட்டன் :————.
      ஈ. விண்ணப்பக்காரரின் தகப்பன்வழிப் பூட்டன் :————.

விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்திருந்தால், (அ) வையும், அத்துடன் (ஆ) அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்பவேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்திருக்காவிடின் (அ) வையும் அத்துடன் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்பவேண்டும்.

4. கல்வித்தகைமை :————.
   (அ) என்ன வகுப்புச் சித்தியெய்திருக்கிறீர் ? (மொழியைக் குறிப்பிடவும்) :————.
   (ஆ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரியுமா ?

5. தொழிற் தகைமை—தொழிற்பயிற்சி தொடங்கியகாலமுதல் உத்தியோகம் பெறும்வரை உமது தொழிற் தகைமைகளை விபரமாகக் கூறுக. (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) : ————.

6. மோட்டார் வாகனங்கள் ஓட்டுவதில் பயிற்சியுண்டா ? லொறி, கார், மோட்டார் சைக்கில் முதலியன ஓட்டுவதற்கு உத்தரவுச் சீட்டு வைத்திருக்கிறீரா ? :————.

7. ஏதாவது விசேட தகைமைகள் :————.

8. தற்போதய உத்தியோகம் (அரசாங்க சேவையிலாயின் விண்ணப்பம் அத்திணைக்கள அதிபருக்கூடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்) : ————.

9. அரசாங்கத்தின் கீழ் எப்போதாவது சேவைசெய்ததுண்டா ? அப்படியாயின் கால எல்லைகளுடன் விபரங்களும், திணைக்களம், பதவி, அத்திணைக்களத்தை எச்சந்தர்ப்பத்தில் விட்டு நீங்கியதென்பதையும் குறிப்பிடுக :————.

10. நற்சான்று இதழ்கள் கொடுத்த இருவரின் பெயர்கள், விலாசங்கள், பதவிப் பெயர்கள் (நற்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :————.

11. பொலிஸ் சேவையில் இதற்குமுன் சாரதி அல்லது கொஸ்தாப்பு வேலைக்கு விண்ணப்பித்தீரா ? அப்படியாயின் அதன்முடிவு என்ன? முடியுமாயின் முன் தொடர்பு குறிப்பிடுக :————.

12. நீர் அல்லது உமது சுற்றத்தாரில் யாராவது ஏதாவது குற்றத்தில் சிக்கியோ, கட்டளை செய்யப்பட்டோ, சாட்டப்பட்டோ, அல்லது குற்றவாளி எனக் காணப்பட்டோ இருக்கிறீர்களா :————.

மேற்கூறிய விபரங்கள் நான் அறிந்தவரையில் உண்மையும் சரியானதுமாகும். மேற்காணும் விபரங்களில் ஏதாவது தவறுகவோ அல்லது பொய்யாகவோ இருப்பின் எனது பொலிஸ் திணைக்களச் சேவை (நான் நியமிக்கப்பட்டிருக்கும் கால்) உடனடியாக நீக்கப்படும் என நான் அறிவேன்.

————.
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

இடம் :————.
திகதி :————.

1–360—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

முல்லைத்தீவு உப–பிரிவின்கீழ் உள்ள முத்தையன்கட்டுக் குளக்கட்டு உயர்த்தல், உடைப்புகள் அடைத்தல் ஆகிய வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதியிலே ரூபா 500,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள மண் வேலைக்கான போதிய இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். வவுனியாவில் உள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதி கொண்ட விண்ணப்பப்பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்த்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 250 கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்ப பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிகமான விபரங்கள் வவுனியாவில் உள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் தேதி.

1–408—17.1.64 ம் திகதிய வர்த்தமானி இல. 13,924

## நீர்ப்பாசன திணைக்களம்

### வவுனியா உப–பிரிவு

இலங்காத்த குளம் திருத்தவேலைக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவில் உள்ள வடபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 11 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 25,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ஆண்டு மாசி மாதம் 7 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50 ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனியா உப–பிரிவு.

வவுனியா,
1964 ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.

1–553—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

## நீர்ப்பாசன திணைக்களம்

### வவுனியா உப–பிரிவு

வவுனியாக் குளம் விசேட பராமரிப்பு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவில் உள்ள வடபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 11 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 40,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ஆண்டு மாசி மாதம் 7 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிபடுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50 ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக் கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
வவுனியா உபபிரிவு.

வவுனியா,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.

1–554—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

## நீர்ப்பாசன திணைக்களம்

### வவுனியா உப–பிரிவு

சின்னப்பரந்தன் குளம் திருத்த வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவில் உள்ள வடபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 11 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 35,000/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ஆண்டு மாசி மாதம் 7 ம் திகதிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 50/- ரூபா கேள்விக்கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனியா உபபிரிவு.

வவுனியா,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.

1–555—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

---

## நீர்ப்பாசன திணைக்களம்

### குருணாகல் உப–பிரிவு

மாதுல்ல அணைக்கட்டு அமைத்தலுக்கான கேள்விப்பத்திரங்கள், வட மேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 11 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 30,000க்கும் அதற்கு கூடிய தொகைக்கும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத்தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 50 கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் குருணாக்கலிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு மாசி மாதம் 7 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். யே. எப். ஆர். சேனரட்ன,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
குருணாகல் உப–பிரிவு.

1–571—17.1.64ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, நாரகேன்பிட்டி, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவர், 1964 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 12 ம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை, வெரகெரையிலுள்ள மத்திய வேலைத்தலத்தில் கூடுதலான அடிச்சட்டப்படல் கூட்டும் சாலையை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார். மேலதிக விபரங்களுக்கு பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப்பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) விண்ணப்பிக்கவும்.

ரூபா. 30,000/- க்கும் மேற்பட்ட தொகைகளுக்குமான வேலைகளுக்குப் பதிவுசெய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களும் இ. போ. ச. கொந்தராத்துக்காரர்களுமே கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அவர்களுடைய சான்றேர்லைகள் பிரதிப் பிரதம பொறியியலாளருக்கு (சிவில்) பரிசோதனைக்குக் காட்டப்பட்டு, அவை அங்கீகரிக்கப்பட்டால், கொழும்பு 5, கிருல வீதி, 200 ம் இலக்கத்திலுள்ள சபையின் பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐக் கட்டவேண்டும்.

பிரதிப் பிரதம பொறியியலாளர் (சிவில்) 1964 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 8 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்களை வழங்குவார். இவரிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு 5,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 9 ந் உ.

1–566—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

## உணவுப் பகுதி

### பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்தில் இருக்கும் சுமார் 125,000 பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 7.2.64 வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 வரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள், ரூபா 500.00 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. பி. திசாநாயக்க,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1964 ம் ஆண்டு ஜனவரி மீ 10 ந் உ.

1–491—17.1.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,924

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமகனிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்க்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.